Madurai Milk Project

* 330 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state with reference to answer given to Question No. 278 on 4—11—1965, the work completed till date and the stage reached in the establishment of the Madurai Milk Project?

The Hon. Sri V. RAMAIAH : Construction of the Main Dairy Building at Madurai and the construction of buildings for Chilling Centres at Srivilliputtur and Virudhunagar have been practically completed except for a few minor items of work. Erection of the Plant and Machinery in the Chilling centres has been completed and that in the Main Dairy is in progress. The entire erection work is expected to be completed and the Dairy commissioned by the end of December 1966.

திரு. வை. சங்கரன் : இந்தப் பால் பண்ணையிலே ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் பால் சேகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது? அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த ஸ்கீம்படி தற்போது நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் சேகரிக்க முடியும். ஆனால் 1,50,000 லிட்டர் வரை பிராசஸ் செய்வதற்கு வசதி இருக்கிறது.

District Gazetteers

* 331 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether the Government have any proposal to publish the District Gazetteers in Tamil also?

The Hon. Sri V. RAMAIAH : Yes, Sir.

12-00 noon திரு. வை. சங்கரன் : எந்தெந்த மாவட்டங்களில் இப்போது உடனடியாகத் தமிழில் வெளியிட உத்தேசித்திருக்கிறது? பின்னால் அது எவ்வாறு விஸ்தரிக்கப்படும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஆங்கிலத்தில் மூன்று நான்கு மாவட்டங்களில் வேலை பூர்த்தியாகி வெளி வந்தாகிவிட்டது. அதை டிரான்ஸ்லேட் செய்யவேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

* 332 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள் எவை, எவை ?

(இ) அவைகள் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா ?

2nd November 1966]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தென் ஆற்காடு மாவட்டத்தில் 17 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லை என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் இப்படி இருக்காது என்று நினைக்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஏன் இந்த நிலைமை வந்தது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 17-ல் இப்போது ஆறு சென்டர்கள் திறக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஆறு என்று கணக்கு கொடுத் திருக்கிறார்கள். இந்த ஆறுக்கே கோர்ட் வரை வழக்காடுகிற நிலைமை வந்திருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கோர்ட் வரையில் வழக்கு ஒன்றும் வந்ததாகத் தகவல் இல்லை. ஆனால், இதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த அங்கத்தினர் களுக்கும்--அவர்களிடையே டிஃபரன்ஸ் ஆஃப் ஒப்பினியன் காரணமாக இது தாமதமாகிறதே தவிர கோர்ட்டுக்குப் போனது எதுவும் காரணம் அல்ல.

*333 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் வட கடலூர் அபிவிருத்தி மன்றத்தில் மரக்காணம் யூனியனுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக கட்டா விட்டாலும், பழைய கட்டடத்திலேயே திறப்பதற்கு அனுமதிக்க லாமென்று தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் அமல் நடத்தாததற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மரக்காணத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை திறக்கவும், அந்த நிலையத்திற்கு வேண்டிய சிப்பந்திகளை நியமித்துக் கொள்ளவும் அரசாங்கம் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்து உள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மரக்காணத்திலே ப்ரைமரி ஹெல்த் சென்டரை, கட்டடம் இல்லாவிட்டாலும் பொதுக் கட்டடம் இருந்தால் அங்கு வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். நடக்கிறது ஏற்கனவேயிருந்த சர்க்கார் டிஸ்பன்ஸரிதான் இருக்க வேண்டும், ப்ரைமரி ஹெல்த் சென்டர் இருக்கக்கூடாது என்று இப்பொழுது பல தகராறுகளும், தொந்தரவுகளும் நடந்து கொண்டிருக்கிறதே, அது அமைச்சர் பார்வைக்கு வந்ததா ? என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த டிஸ்பன்ஸரியை ப்ரைமரி ஹெல்த் சென்டராக கன்வர்ட் செய்வதில் வரக்கூடிய தகராறு காரணமாக பிரதம சுகாதார நிலையம் திறப்பதற்கு

---

[a] Printed as Appendix V on page 103–105.